கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். VBS பணிகள் முடிந்து நாம் ஆண்டுகள் தோறும் நடத்தும் முகாம்கள் நடைபெற்றுவருகிறது. முகாம்களுக்காக ஜெபியுங்கள். ஆலயமில்லா கிராமங்களில் நாம் நடத்தின VBS பணியின் பின்தொடர் பணியாக இந்த சிறுவர் முகாம்கள் நடைபெறுகிறது. இந்த முகாம்கள் மூலம் சந்திக்கப்படுகிற சிறுவர்களுக்காகவும் அவர்கள் பெற்றோர்களுக்காகவும் ஜெபியுங்கள். ஆலயமில்லா கிராமங்களில் புதிய சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட ஜெபியுங்கள். இம்முகாம்களை தாங்க முன்வருவோர் ஒரு முகாமிற்கு ரூ. 10,000 கொடுத்த தாங்க முன் வாருங்கள். சிறுவர் முகாம்கள் 20ம், வாலிபர் முகாம்கள் 20ம், குடும்ப முகாம்கள் மற்றும் மாணவர் முகாம்களும் தேவன் தரும் திறந்த வாசல்கள் படி நடத்தப்படும். இவைகளுக்காக ஜெபியுங்கள்.

## நடந்து முடிந்த முகாம்களுக்காய் தேவனைத் துதியுங்கள்

### சிறுவர் குதூகல முகாம்கள்

| | | |
|---|---|---|
| 28.9.2014 | கிருபையின் ஆலயம் | ஸ்ரீமூலக்கரை, தூ-டி மாவட்டம் |
| 29.9.2014 | CSI துவக்கப்பள்ளி | சிப்பிப்பாறை, நெல்லை மாவட்டம் |
| 30.9.2014 | CSI ஆலயம் | அழகநேரி, நெல்லை மாவட்டம் |
| 01.10.2014 | கிருபையின் ஆலயம் | அப்பனேரி, தூத்துக்குடி மாவட்டம் |
| 04.10.2014 | யோவேல் அவர்கள் தோட்டம் | விசுவாசபுரம், நெல்லை மாவட்டம் |
| 05.10.2014 | கிருபையின் ஆலயம் | செந்நெல்குளம், விருதுநகர் மாவட்டம் |
| 12.10.2014 | கிருபையின் ஆலயம் | புல்லலக்கோட்டை, விருதுநகர் மாவட்டம் |
| 12.10.2014 | சமுதாயக்கூடம் | செம்பூர், தூத்துக்குடி மாவட்டம் |

### வாலிபர் வெற்றி முகாம்கள்

| | | |
|---|---|---|
| 13.7.2014 | CSI ஆலயம் | மறவன் மடம், தூத்துக்குடி மாவட்டம் |
| 3.8.2014 | CSI ஆலயம் | திம்மராஜபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 4.10.2014 | YMCA மஹாலில், | செல்லத்துரை ஹால் சாட்சியாபுரம், சிவகாசி, விருதுநகர் மாவட்டம் |

### மாணவர் முகாம்கள்

| | | |
|---|---|---|
| 09.08.2014 | தக்கர் மேனிலைப்பள்ளி | பண்ணைவிளை, தூ-டி மாவட்டம் |
| 06.09.2014 | அன்னம்மாள் மெட்ரிக் பள்ளி | ஆறுமுகநேரி, தூ-டி மாவட்டம் |

ஆலயமில்லா கிராமங்களில் நடத்தும் நற்செய்தி கூட்டங்களும் நடைபெற்று வருகிறது. தற்போது தட்டப்பாறை கிராமத்தில் மூன்று நாட்கள் நற்செய்தி கூட்டங்கள் நடைபெற்றது. ஆகஸ்ட் 2,3 தேதிகளில் தேவனுடைய கூடாரத்தில் சீஷத்துவ முகாம் நடைபெற்றது. அதில் 50க்கும் மேற்பட்ட வாலிபர்கள், சீஷத்துவ வாழ்க்கையில் பயிற்றுவிக்கப்பட்டனர். உங்கள் ஜெபங்களுக்காக நன்றி. தொடர்ந்து உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

அன்புடன் உங்கள் சகோதரன்

**பா. பொற்செல்வன் ஆசீர்**



## நான் என்ன செய்ய வேண்டும்?

**தொடர் - 72**

அக்டோபர் 2014

*தொகுப்பு :* **Dr. B. வில்லியம் தர்மராஜா**

**ரோமர்**

3551 இரக்கமில்லாதவனாயிராதே (1:30)

3552 கேடானவைகளைச் செய்யாதே (1:32)

3553 கேடானவைகளைச் செய்கிறவர்களிடத்தில் பிரியப்படாதே (1:32)

3554 மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்காதே; நீ குற்றமாகத் தீர்க்கிறவைகளை நீயே செய்யாதே (2:1,3)

3555 தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு. பொறுமை, நீடிய சாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டை பண்ணாதே (2:4)

3556 சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடு (2:7)

3557 சண்டைக்காரனாயிராதே (2:8)

3558 சத்தியத்திற்குக் கீழ்ப்படி (2:8)

3559 அநியாயத்திற்குக் கீழ்ப்படியாதே (2:8)

3560 பொல்லாங்கு செய்யாதே; உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும் (2:9)

3561 நன்மை செய்; மகிமையையும் கனமும் சமாதானமும் உண்டாகும் (2:10)

3562 பாவஞ்செய்யாதே (2:12, 3:23)

3563 மற்றவனுக்குப் போதிக்கிற நீ உனக்குத் தானே போதியாமலிருக்கலாமா? (2:21)

3564 தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே உன் மூலமாய் தூஷிக்கப்படக்கூடாது (2:24)

3565 ஆவியின் படி இருதயத்தில் விருத்தசேதனம் உண்டாவதாக. (2:29)

3566 தேவனைத் தேடு (3:11)

3567 நன்மை செய் (3:12)

3568 தேவனை விசுவாசி; அது உனக்கு நீதியாக எண்ணப்படும் (4:3)

3569 நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும் விசுவாசி (4:18)

3570 விசுவாசத்திலே பலவீனமாயிராதே (4:19)

3571 தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாதே (4:20)

3572 தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்து (4:21)

3573 உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டு (5:4); உபத்திரவம் பொறுமையையும் பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறது. (5:3)

3574 பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதே (6:6)

3575 பாவத்திற்கு மரித்தவனா(ளா)கவும், கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவனா(ளா)கவும் எண்ணிக்கொள் (6:11)

3576 சரீரஇச்சைகளின்படி மரணத்துக்கேதுவான (6:16) பாவத்திற்குக் கீழ்ப்படியாதே (6:12)

3577 உன் அவயவத்தை அநீதியின் ஆயுதமாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாதே (6:13)
5378 மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவனாகத் தேவனுக்கு ஒப்புக்கொடு (6:13)
3579 உன் அவயவத்தை நீதிக்குரிய ஆயுதமாகத் தேவனுக்கு ஒப்புக்கொடு (6:13)
3580 நீதிக்கு அடிமையாயிரு (6:18)
3581 உன் அவயவத்தை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமையாக ஒப்புக்கொடாதே (6:19)
3582 பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உன் அவயவத்தை நீதிக்கு அடிமையாக ஒப்புக்கொடு (6:19)
3583 புருஷன் உயிரோடிருக்கையில் வேறொருவனை விவாகம் பண்ணாதே (7:2)
3584 தேவனுக்கென்று கனி கொடு (7:4)
3585 மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின் படி நட (8:4)
3586 மாம்சத்துக்குரியவைகளைச் சிந்தியாமல் ஆவிக்குரியவைகளைச் சிந்தி (8:5)
3587 மாம்சத்துக்குட்பட்டவனாயிராதே; அவன் தேவனுக்குப் பிரியமானவனல்ல (8:8)
3588 தேவனுடைய ஆவி உன்னில் வாசமாயிருப்பதாக (8:9)
3589 கர்த்தரிடத்தில் விசுவாசமாயிரு; நீ வெட்கப்படுவதில்லை (9:33; 10:11)
3590 ஜனங்கள் இரட்சிக்கப்படவேண்டும் என்பது உன் இருதயத்தின் விருப்பமும், நீ தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருப்பதாக (10:1)
3591 சுயநீதியை நிலைநிறுத்தத் தேடாமல் தேவநீதிக்குக் கீழ்ப்படி (10:3)
3592 கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசி; இரட்சிக்கப்படுவாய் (10:9)
3593 கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்; இரட்சிக்கப்படுவாய் (10:13)
3594 சாமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவி (10:15)
3595 மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு (11:20)
3596 தேவனுடைய தயவிலே நிலைத்திரு. (11:22)
3597 உன்னையே புத்திமானென்று எண்ணாதே (11:25)
3598 நீ உன் சரீரத்தை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடு; இதுவே நீ செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை (12:1)
3599 நீ இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாதே (12:2)
3600 உன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், தேவன் உனக்குப் பகிர்ந்த விசுவாச அளவின்படியே எண்ணு (12:3)


**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை**

**தேவனுடைய கூடாரத்தில்**

**20வது வருட நிறைவு திறப்பின் வாயில் ஜெபமும் ஸ்தோத்திர கூடுகையும்**

**2014 அக்டோபர் 29, கடைசி புதன் – காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

**நீங்களும் வாருங்கள்!** **கலந்து கொள்ளுங்கள்!**

**இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!**

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை–626 201. போன் 04562–258194




# *விசுவாசத்தை தரித்துக்கொள்ளுங்கள்*

**சகோ. S. ஜெபராஜ்** President, Grace Ministries

கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த ஆண்டின் துவக்கம் முதல் ஒவ்வொரு மாத இதழிலும் விசுவாச வாழ்வு அறிக்கை என்ற பொருளில் தேவன் நமக்கு அநேக காரியங்களைக் கற்று கொடுத்து வருகிறார். அவைகள் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் நீங்கள் வளம்பெற உறுதுணையாய் இருக்கும் என கிறிஸ்துவில் விசுவாசிக்கிறேன். கடைசி நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற நாம் நமது ஆவிக்குரிய ஜிவியத்தில் விழிப்புள்ளவர்களாய், உற்சாகமாய் செயல்படுகிறவர்களாய் வாழ அழைக்கப்படுகிறோம். பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து விசுவாசத்தைத் தரித்துக் கொள்ளக்கடவோம். (1தெச. 5:8).

## 1. நீங்கள் பகலுக்குரியவர்கள்

இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்திற்கு உட்படுத்தினார். (கொலோ. 1:13). நீங்களோ அந்தகாரத்தினின்று ஆச்சரியமான ஒளியினிடத்தில் வரவழைக்கப்பட்டவர்கள் (1பேது. 2:9). இரவு சென்று போயிற்று பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளக்கடவோம். (ரோமர் 13:12). அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தர உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது. (லூக். 1:78) உன் ஒளி வந்தது. கர்த்தரின் மகிமை உன்மேல் பிரகாசித்தது, எழும்பிப் பிரகாசி (ஏசா. 60:1). பகலுக்குரியவர்கள் வெளிச்சத்தில் நடக்கிறார்கள். வானத்திலிருந்து ஒரு ஒளி சவுலைச் சுற்றி பிரகாசித்தது. அது சூரியப்பிரகாசத்திலும் அதிகமான ஒளியாயிருந்தது. (அப். 26:13). அதுவே அவரை மற்றவர்களுக்கு வெளிச்சம் கொடுக்கும்படி மாற்றியது. பகலுக்குரியவர்கள் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி (யோவா. 1:9). சங்கீதக்காரன் தேவனிடத்தில் விண்ணப்பம் செய்கிறார். உமது முகஒளியை எங்கள் மேல் பிரகாசிக்கப் பண்ணும் (சங். 4:6). தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலே இருந்து, இருளிலே நடக்கிறான். இருளானது அவன் கண்களைக் குருடாக்கினபடியால் தான் போகும் இடம் இன்னதென்று அறியாதிருக்கிறான். (1யோ. 2:11) பகலுக்குரியவர்களாய் நடந்து கொள்ளத் தங்களை அர்ப்பணிக்கிறவர்களுக்கு தேவன் தருகிற வழிகாட்டுதல் : கட்டளையே விளக்கு; வேதமே வெளிச்சம் (நீதி. 6:23). உமது வசனம் என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. (சங். 119:105). மெய்யான ஒளியாகிய கிறிஸ்து உங்களில் பிரகாசிக்கும்பொழுது நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருப்பீர்கள். உங்கள் வெளிச்சம் மற்றவர்கள் முன்பாக பிரகாசிக்கும். பாவஇருள் உங்கள் இருதயத்தை குருடாக்காதபடி பரிசுத்தத்தைப் பற்றிக் கொள்ளுங்கள். உங்கள்

வாழ்க்கையில் ஏதோ ஒரு பாவம் உங்களை வெளிச்சத்தில் நடக்கமுடியாதபடி உங்கள் மனக்கண்களைக் குருடாக்கிக் கொண்டிருக்கிறதோ? அதைக் களைந்து உதறி விட்டு வெளியே வாருங்கள். தேவனுடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காணுங்கள். (சங். 36:9). கர்த்தருடைய வெளிச்சத்தில் நடக்கக் கற்றுக்கொள்ளுங்கள் (ஏசா. 2:5). பகலில் நடக்கிறவர்கள் போல் சீராய் நடந்து கொள்ளுங்கள். (ரோமர் 13:13). நீங்கள் பகலின் பிள்ளைகளாய் (தேவனுடைய பிள்ளைகளாய்) இருக்கிறீர்கள் (1தெச. 5:5). உங்கள் வாழ்வில் இது உண்மைதானா?

**2. நீங்கள் தெளிந்தவர்கள்**

ஏவாளை சர்ப்பம் வஞ்சித்தபோது, அவளுக்கு விலக்கப்பட்ட விருட்சத்தின் கனி, புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும் புத்தியை தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்கதுமாயிருநதது. (ஆதி. 3:6). முடிவோ அவர்களுடைய பாவக்கண்கள் திறக்கப்பட்டது. கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, ஒளித்துக்கொண்டார்கள். தேவபிரசன்னத்தை இழந்தார்கள். நெற்றியின் வியர்வை நிலத்தில் விழ பாடுபட தள்ளப்பட்டார்கள். நீங்கள் தெளிந்தவர்களாயிருந்தால் பாவத்தில் அல்ல, பரிசுத்தத்தில் நடப்பீர்கள். கர்த்தருடைய கற்பனை உங்கள் கண்களை தெளிவிக்கும் (சங். 19:8). உன் கண் தெளிவாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும் (மத். 6:22). பாவமும், பிசாசும் உங்களை ஆளும்போது, நீங்கள் தெளிவுள்ளவர்களாய் இருக்க முடியாது. உங்கள் வாழ்க்கை பிரச்சனைகளினாலும் அந்தகார இருளின் வல்லமையினாலும் ஆட்கொள்ளப்பட்டுவிடும். பிசாசு பிடித்திருந்த மனிதனுக்குள்ளே இருந்த அசுத்த ஆவிகளை இயேசு துரத்திய பின்பு, அவன் வஸ்திரம் தரித்து, உட்கார்ந்து, புத்தி தெளிந்தவனாய் மாறினான் (மாற். 5:15). தேவ ஆவியினால் ஆட்டுகொள்ளப்பட்டிருக்கும் தேவபிள்ளைகள் அனைவரும் எல்லாக் காரியங்களிலும் குறிப்பாக தேவனுக்கடுத்த காரியங்களிலும் தெளிவு உள்ளவர்களாய், தேவனுக்காக செயல்பட வேண்டும். மகிமையின் பிதாவானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டும். (எபே. 1:17). தீமோத்தேயு என்னும் வாலிபனுக்கு பரிசுத்த பவுல் கூறும் ஆலோசனை நீயோ எல்லாவற்றிலும் மனத் தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று (2தீமோ. 4:5). தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும், தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் (2தீமோ. 1:7).

**நீங்கள் விசுவாசத்தை தரித்துக் கொண்டவர்கள்.**

ஆபிரகாம் கர்த்தரை விசுவாசித்தான். அதை அவனுக்கு நீதியாக எண்ணினார். (ஆதி. 15:6, கலா. 3:6). இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை விசுவாசியாமல் கலகம் பண்ணுகிறவர்களாயிருந்தார்கள். விசுவாசம் ஒரு மனிதனைக் கெட்டு போகாமல் காக்கும் (சங். 27:13). விசுவாசம் உங்களை தேவனுக்காக பேச வைக்கும் (சங். 116:10).



விசுவாசம் நீதிமானுக்கு ஜீவனைக் கொடுக்கும் (கலா. 3:11). விசுவாசம் உங்களை இரட்சிக்கும் (மத். 9:22). முதல் நூற்றாண்டு திருச்சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டிருந்ததால் பெருகிற்று (அப். 16:5). ஆவிக்குரிய வாழ்க்கைக்கு எந்த தாக்குதல் வந்தாலும் அதை வெற்றி கொள்வதற்கு உங்களுக்கு கேடகமாகிய, மார்க்கவசமாகிய விசுவாசம் மிக அவசியம். அநேகருடைய வாழ்க்கையில் உலகத்தின் மேன்மையும் ஐசுவரியமும், பண ஆசையும் விசுவாசத்தை விட்டு அவர்களை வழிவிலகச் செய்வதுமல்லாமல் அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள். (1தீமோ. 6:10). விசுவாசத்தின் நல்லப் போராட்டத்தை போராடுங்கள். அதற்காகவே நீங்கள் அழைக்கப்பட்டீர்கள். (1தீமோ. 6:10). விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடுங்கள். அதற்காகவே நீங்கள் அழைக்கப்பட்டீர்கள். (1தீமோ. 6:12). விசுவாசத்தைக் காத்துக் கொள்ளுங்கள். உங்கள் விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவரும் இயேசுவாக இருக்க வேண்டும் (எபி. 12:1). கிரியைகளினாலே உங்கள் விசுவாசம் பூரணப்படட்டும். உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் (1யோ. 5:4). இந்த விலையேறப்பெற்ற விசுவாசத்தை தரித்துக் கொள்வீர்களா?

எனது விசுவாச வாழ்வு அறிக்கை : நான் பகலுக்குரியவனாய், நடந்து தெளிந்தவனாய் வாழவும், விசுவாசத்தைத் தரித்துக் கொள்ளவும் தீர்மானிக்கிறேன்.

## *பணித்தளங்களுக்காய் முழங்காலில்*

### தூத்துக்குடி மாவட்டம்

**ஆண்டாள் நகர்** – ஆலயத்தின் அருகாமையிலிருக்கும் குடும்பத்தார் பின்மாற்றத்திலிருந்து மனந்திரும்ப, ஏஞ்சல் ஏஞ்சலுடைய தம்பியின் கல்விக்காக ஞானத்திற்காக, அவர்களுடைய தகப்பனார் விசுவாசத்திற்குள் கடந்துவர ஜெபிப்போம்.

**புதுக்கோட்டை** – பொட்டலூரணியைச் சேர்ந்த சகோதரி. சங்கீதாவிற்கு ஏற்ற துணை கிடைக்க... சகோதரி. ரோஸ்லின் ராணி, சகோ. ஜெபராஜ் இவர்களுக்கு வேலை கிடைக்க...

**தட்டப்பாறை – வரதராஜபுரம்,** உமரிக்கோட்டை, செட்டியூரணி ஆகிய பகுதிகளில் வாலிபர்கள் மத்தியில் சுவிசேஷத்திற்கு காணப்படும் எதிர்ப்புகள் மாற ஜெபிப்போம்.

**சொக்கலிங்கபுரம் –** அனிதா, ஐயப்பன் இருவருக்கும் காது கேட்காது, வாய் பேச முடியாது. இவர்களுக்கு தேவன் அற்புதம் செய்ய ஜெபிப்போம்.

**ஸ்ரீமூலக்கரை –** சகோ. மாரிமுத்துவிற்கு கால் இடுப்பு பகுதி நரம்பு நன்றாக செயல்பட அவர்களுடைய அம்மா இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**தூத்துக்குடி –** சகோ. ராபர்ட், ராஜசேகர் இவர்களின் இரட்சிப்பிற்காகவும், சகோதரி. ஏஞ்சல் பிரியா, செல்வி இவர்களின் திருமணத்திற்காகவும் ஜெபிப்போம்.

**பேட்மாநகரம் –** பேட்மாநகரம், சுந்தரலிங்கபுரம் பகுதிகளில் நடக்கிற ஞாயிறு பள்ளிக் கூடுகையில் கலந்து கொள்கிற சிறுவர்களும், அவர்கள் குடும்பங்களும் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**தாளமுத்துநகர் –** இந்தப் பகுதியில் காணப்படும் ஜாதி பிரச்சனையில் வரும் கலவரங்கள் மாற, வாலிபர்களுக்குள் காணப்படும் பழிவாங்கும் எண்ணங்கள் மாற

ஜெபிப்போம்.

**சுப்பிரமணியபுரம், சக்கம்மாள்புரம் –** சுவாமியடியான் சகோதரன் குடிப்பழக்கம் மாறி இரட்சிக்கப்பட, பொன்ராஜ் சகோதரன் குடும்பம் இணைந்து வாழ, சகோதரி. ரூபிக்கு நல்ல வேலை கிடைக்க இக்கிராமத்தின் ஜனங்கள் இயேசுவை கண்டு கொள்ள....

**விருதுநகர் மாவட்டம்**

**புல்லலக்கோட்டை –** இங்கு ஆலய ஆராதனைக்கு வருகிற மக்களை ஊரில் உள்ள வாலிபர்கள் ஆலயத்திற்கு சென்றால் வேலை கிடைக்காது என்று சொல்லி ஜனங்களை மிரட்டுகிற வாலிபர்களை தேவன் தொடும்படி ஜெபிப்போம். ஆரம்ப காலத்தில் ஆலயத்திற்கு வந்த வாலிபர்கள் தடையின்றி ஆலயத்தின் வர ஜெபிப்போம்.

**என். திருவேங்கடபுரம் –** ரெட்டியப்பட்டி சகோ. டேனியல் அவர்களின் மகன் ராஜன் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட, அவரின் குடும்பம் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**முக்கூட்டுமலை –** இக்கிராமத்தில் விக்கிரக ஆவியின் கிரியைகள் செயலிழக்கப்பட, பின்மாற்றத்திலிருக்கிற அனைவரும் மீண்டும் ஆலயத்திற்கு வர ஜெபிப்போம்.

**ஜமீன் சல்வார்பட்டி –** தம்மநாயக்கன்பட்டி – சகோ. ஜான் 35 லட்சம் ரூபாய் கடன் பிரச்சனைகள் மாற... செய்கிற தொழில் ஆசீவதிக்கப்பட, சகோ. சொர்ண முத்துவிற்கு சுகர் பிரஷர் வியாதி சுகமாக, சகோ. முத்துராஜ் கடன்பிரச்சனைகள் மாற, தொழில் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

**நெல்லை மாவட்டம்**

**மைப்பாறை –** சகோ. இம்மானுவேல் ஜெபராஜ் இவர்கள் சபைக்கு வருகிறார்கள். பூரண இரட்சிப்பு பெற இவர்களுக்காக ஜெபிப்போம்.

**அத்தியூத்து** – ஆலங்குளம் – சகோதரி. தேன்மொழி, மாலதி இவர்களுக்கு கர்ப்பத்தின் கனி கிடைக்க சகோதரி வசந்திக்கு கர்த்தர் சுகப்பிரசவத்தை கொடுக்க... சகோ. சொரிமுத்து பாவத்திலிருந்து விடுதலை பெற, சகோ. ஞானய்யா சீட்டு விளையாட்டிலிருந்து விடுதலை கிடைக்க, சகோ. சித்திரைவேல் இரட்சிக்கப்பட விடுதலை பெற ஜெபிப்போம்.

**அய்யனேரி –** ஆலயம் கட்ட காணப்படுகிற தடைகள் மாற...

இளையரநேத்தல் – சகோதரி. வசந்தியின் மகள் ஜெயா நடக்க முடியாமல் இருக்கிறாள்கள். கர்த்தர் விடுதலை தரும்படியாக ஜெபிப்போம்.

**அப்பனேரி** – சகோதரி. ரெஜினா என்கிற சகோதரிக்கு திருமணம் நடைபெற ஞானஸ்நானம் பெற, சகோ. கண்ணனுக்கு கால்களில் பல ஆண்டுகளாக இருந்து வரும் புண் சுகமாக ஜெபிப்போம்.

**திருச்சி மாவட்டம்**

**தோப்பு பட்டி –** ஜெயசீலி என்ற சகோதரிக்கு தொண்டையில் இருக்கும் தைராய்டு கட்டி மறைய, சாந்தி என்ற சகோதரியினுடைய தம்பி மனநிலை பாதிப்பிலிருந்து விடுதலை பெற... சகோ. ராயப்பன் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**மதுரை மாவட்டம்**

பணித்தளம் : **திரளி –** சகோதரி. விமலாவிற்கு பேங்க் வேலை கிடைக்க, சகோதரி. சாந்தி, மேகலா குடும்பம், ஜெயா, பாண்டியம்மாள், சின்னம்மா பேச்சி ஞானஸ்நானம் எடுக்க, மாணிக்கம் முத்துராஜ் ஞானஸ்நானம் எடுக்க, திரளியில் ஞானஸ்நான தொட்டி கட்ட வேலைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.



# நல்நடக்கை உள்ளவர்களாய்....

## 1தெசலோனிக்கேயர்

1. உங்கள் கிரியை விசுவாசத்தினால் நிறைந்ததாயிருப்பதாக (1:2)
2. உங்கள் பிரயாசம் அன்பினால் நிறைந்ததாயிருப்பதாக (1:2)
3. உங்கள் பொறுமை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள நம்பிக்கையினால் நிறைந்ததாயிருப்பதாக (1:2).
4. உங்கள் சுவிசேஷம் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழுநிச்சயத்தோடும் உள்ளதாயிருப்பதாக. (1:5).
5. உபத்திரவத்தின் நடுவிலும் திருவசனத்தை பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்கிறவர்களாயிருப்பீர்களாக (1:6).
6. விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளாய் இருப்பீர்களாக (1:7).
7. ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியம் செய்வதற்கு விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பியிருக்கிறீர்கள் என்பதை மறவாதிருப்பீரக்ளா (1:9)
8. இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவரு மாயிருக்கிற இயேசுகிறிஸ்து மறுபடியும் வருவதை எதிர்பார்த்து கொண்டிருக்கிற வர்களாயிருப்பீர்களாக (1:10).
9. பாடுபட்டு நிந்தையடைய்தாலும் வெகு போராட்டத்தோடே தேவனுடைய சுவிசேஷத்தை சொல்லும்படி தைரியம் கொண்டவர்களாயிருப்பீர்களாக (2:2).
10. உங்கள் போதகம் வஞ்சகத்தினாலும், துராசையினாலும் உண்டாகமலும், கபடமுள்ளதாயிராமலும் இருப்பதாக. (2:3).
11. மனுஷருக்கல்ல இருதயங்களை சோதித்தறிகிற தேவனுக்கு பிரியமுண்டாக பேசுகிறவர்களாயிருப்பீர்களாக (2:4)
12. நீங்கள் ஒருக்காலும் இச்சகமான வசனங்களை சொல்லுகிறவர்களாய் இராதிருப்பீர்களாக (2:5).
13. நீங்கள் பொருளாசையுள்ளவர்களாய் மாயம் பண்ணுகிறவர்களாய் இராதிருப்பீர்களாக (2:5).
14. நீங்கள் மனுஷரால் வரும் மகிமையை தேடுகிறவர்களாய் இராதிருப்பீர்களாக (2:6).
15. விசுவாசிகளுக்குள்ளே பரிசுத்தமும், நீதியும், பிழையற்றவர்களாய் நடக்கிறவர்களாயிருப்பீர்களாக. (2:10)

*தொகுப்பு :* சகோ. B. பொற்செல்வன் ஆசீர்

## *தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்*

நாள் : 2014 அக்டோபர் 28 – கடைசி செவ்வாய்
நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய
இடம் : காமராஜர் திருமண மண்டபம்,
பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.
*தேவசெய்தி :* சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்

# FELLOWSHIP

**Dr. P. Selvaraj, Pollachi**

I don't have to over emphasise the need for and the advantages of christian fellowship. Human society has a plethora of fellowships many of which are not fellowships in the real sense of the term. Christian fellowship is so unique that it can't be compared with even the best fellowship the secular world has. I'm not saying this from what I think or because of my religious orientation. What does the Bible say about fellowship?

Lying in fellowship is a trespass against the LORD (Lev. 6:2) We're warned against fellowshipping with the throne of iniquity (Ps. 94:20). We need continual fellowship with the throne of God. The new souls continued steadfastly in the apostles' doctrine and fellowship, and in breaking of bread, and in prayers (Act. 2:42). We understand from this verse that fellowship is as important as doctrine, communion and prayer. God has faithfully called us into the fellowship of His son Jesus Christ our Lord (1C. 1:9). Are we aware that when we eat or drink anything sacrificed to devils we enter into fellowship with devils? (1C. 10:20). Believers marrying unbelievers results in a fellowship between righteousness (light) and unrighteousness (darkness) (2C. 6:14). Ministering to the saints is fellowship. (2C. 8:4). The right hands of fellowship provided missionary counsel to Paul and Barnabass (Gal. 2:9). The fellowship of the mystery implies (secretly planned by God) fellowship with Christ our Saviour (Eph. 3:9).

Fellowship with the unfruitful works of darkness? No. We should rather reprove those works (Eph. 5:11). Like fellowship with, fellowship in is equally important. Is our fellowship in the gospel which means according to the gospel? (Phil. 1:5). Christ's example leads us to fellowship of the Holy Spirit (Phil. 2:1). Fellowship of christ's sufferings will develop Christ - like character in us (Phil. 3:10). We should have fellowship with those who have fellowship with Father God and His Son Jesus Christ (1Jn. 1:3). If we've true fellowship with God we won't walk in darkness (1Jn. 1:6). If we walk in the light we have fellowshop with one another too! (1Jn. 1:7).

We need to evaluate our fellowship or the fellowship we have applying the yardsticks the above verse provide. Do we have fellowship? If the answer to this Question is YES we read to confirm whether our YES is YES in the true sense of what the WORD OF TRUTH says about Fellowship. Amen! Alleluiah!!



## பண்டிகை கால வெகுமதி

ஒவ்வொரு ஆண்டும் பண்டிகைக்காலத்தில் நமது மிஷனெரிகளுக்கும் பிள்ளைகளுக்கும் மற்றும் பணித்தளத்திலுள்ள ஏழை மக்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் நாம் உதவி செய்து வருகிறோம். அதற்காக நீங்கள் ஒவ்வொரு ஆண்டும் உதாரத்துவமான காணிக்கையை கொடுத்து வருகிறீர்கள். இந்த ஆண்டு நமது தேவை ரூ. 2½ லட்சம். ஒவ்வொரு ஆண்டையும் போல உங்கள் காணிக்கைகளை அனுப்பித் தாங்க உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

## தேவனைத் துதியுங்கள்

தூத்துக்குடி சகோ. டங்ஸ்டன் ஜோசப் குடும்பத்தினர் தங்கள் உபயோகத்திலிருந்த பஜாஜ் பிளாட்டினா இரு சக்கர வாகனத்தை நமது மிஷனெரிகளின் உபயோகத்திற்காக காணிக்கையாக கொடுத்துள்ளனர்.

முக்கூட்டுமலையைச் சேர்ந்த சகோ. விவேகானந்தன் குடும்பத்தினர் தங்கள் உபயோகத்திலிருந்த ஹீரோ ஹோண்டா இரு சக்கர வாகனத்தை நமது மிஷனெரிகளின் உபயோகத்திற்காக காணிக்கையாக கொடுத்துள்ளனர். தேவன் இந்த குடும்பத்தினர் களையும் அவர்கள் பிரயாசங்களையும் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.



## தேவனைத் துதியுங்கள்

தூத்துக்குடியைச் சேர்ந்த சகோ. ஜாண் அவர்கள் குடும்பத்தினர் தங்கள் உபயோகத்திலிருந்த புதிய Honda Amaze நான்கு சக்கர வாகனத்தை நம்முடைய ஊழிய உபயோகத்திற்குக்கென்று காணிக்கையாக கொடுத்துள்ளனர். தேவன் இந்த குடும்பத்தினரையும் அவர்கள் பிரயாசத்தையும் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

## *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம்<br>Grace Ministries<br>Grace Ministries | SBIN0007629<br>TMBL0000156 | SBI Bazaar, Tuticorin<br>TMB Ltd., Sipcot Tuticorin | 10237757808<br>156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம்<br>Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம்<br>Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும். நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.